

வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு

2021

செயலாற்றுகை அறிக்கை

இல. 1090, சிரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய.

செயலாற்றுகை அறிக்கை
2021
வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு

செலவினத் தலைப்பு எண்: 161

வனஜீவராசிகள் பாதுகாப்பு, யானைவேலி மற்றும் அகழிகள் நிருமாணம் உள்ளடங்கலான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் காடுகள் மீள் வளர்ப்பு மற்றும் வன வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

செலவினத் தலைப்பு எண்: 424

உள்ளடக்கம்

பக்கம்

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு 13

அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம் 19

அத்தியாயம் 03 - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதி செயலாற்றுகை 55

அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டிகள் 63

அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதற்கான செயலாற்றுகை 64

அத்தியாயம் 06- மனித வள விபரம் 65

அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை 69

விவசாய மற்றும் வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு கௌரவ அமைச்சரிடமிருந்து....

"வனசீவராசிகள் மற்றும் வன வளத்தைப் பேணும் நிலைபேறான தேசம்"

தற்போது முழு உலகமும் பேசுபொருளாக கொண்டுள்ள நிலைபேறான புவிக்காக வனசீவராசிகள் வளங்களைப் பேணும் தேசத்தை உருவாக்குவதில் பெரும் பங்களிப்பை வழங்கும் செயற்பணிக்கு ஒத்துழைப்பு நல்கி வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சின் முன்னேற்றத்தை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அவ்வாறே 23.05.2022 ஆம் திகதி அமைச்சரவை சீர்திருத்தம் மூலம் விவசாய வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சாக இவ்வமைச்சு மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டது.

கொவிட் 19 பெருந்தொற்று நாடு பூராகவும் பரவி மனித மற்றும் விலங்களுக்கு சவால்விடுக்கும் இக்காலப் பகுதியில் "நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்திற்கு ஏற்புடைய இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கி வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு தற்போது பாரிய பணியை மேற்கொண்டுவருகின்றது.

நாம் முகம் கொடுக்கும் பிரதான சவாலாக யானை மனித மோதலைக் குறிப்பிட முடியும். இந்த மோதல் காரணமாக வருடாந்தம் அதிகமான மனித உயிர்கள் மற்றும் யானைகளை நாம் இழக்கின்றோம். எனவே மேற்குறிப்பிட்ட சவாலை வெற்றிகொள்வதற்காக எதிர்வரும் மூன்றாண்டுகளுக்கு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதன் போது விசேடமாக அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் யானை மனித மோதலை தீர்ப்பதற்காக விசேட செயலணியொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவினால் குறுகியகால மற்றும் நீண்டகால தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. குழுவின் முன்மொழிவுகளை துரிதமாக செயற்படுத்துவதற்கு வனசீவராசிகள் இராஜாங்க அமைச்சினாலும் மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது.

அமைச்சின் கீழ் இயங்கிவரும் சூழல் தொகுதிப் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கருத்திட்டத்தின் மூலம் யானை மனித மோதலை குறைப்பதற்கு கிராமத்தைச் சூழ "கிராமிய மின்சார வேலி" நிர்மாணிக்கும் பணிகள் தற்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யானை மனித மோதல் உக்கிரமாகக் காணப்படும் இரு மாவட்டங்களான அநுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்ட மக்களின் ஒத்துழைப்புடன் தற்போது இந்த கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மேற்படி கருத்திட்டத்தின் மூலம் காட்டு யானைகளால் சேதமாக்கப்படும் அப்பாவி மக்களின் பயிர் நிலங்களைப் பாதுகாப்பதற்காக "விவசாய மின்சார வேலி" நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எவ்வாறெனினும் துரதிஷ்டவசமாக யானை தாக்குதலால் உயிரிழக்கும் மக்களுக்கு அரசாங்கத்தினால் நஷ்டஈடு தொடர்ச்சியாக வழங்கப்படுகின்றது. யானை தாக்கி உயிரிழக்கும் மற்றும் பூரண அங்கவீன நிலைக்கு உட்படுபவர்களுக்கு வழங்கப்படும் நஷ்டஈட்டுத் தொகையை 5 இலட்சம் ரூபாவிலிருந்து 10 இலட்சம் ரூபா வரை அதிகரிப்பதற்கு தற்போது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்றது.சூழல் தொகுதிப் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவக் கருத்திட்டத்தின் மூலம்

இலங்கையின் சூழல் பாதுகாப்பை பாதுகாப்பதற்கும் வனப் பிரதேசங்களை அண்டிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் பல கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், சூழல் சார்ந்த சுற்றுலாத்துறையை விருத்திசெய்தல் மற்றும் வனப் பிரதேசங்களில் நிலத்தோற்ற முகாமைத்துவத்தை திட்டமிடுவதன் மூலம் சரியான தரவுகளை வழங்குவதற்கு தேவையான வசதிகள் வழங்கப்படுகின்றன.

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் பிரதானமாக யானை மனித நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக யானை வேலிகளை நிர்மாணித்தல் மற்றும் இயற்கைச் சூழலைப் பாதுகாத்து யானைகள் பயணிக்கும் இடங்களிலுள்ள தடைகளை நீக்கி யானைகளுக்கு சுதந்திரமாக உலாவுவதற்குத் தேவையான வசதிகள் செய்யப்படுகின்றன. அவ்வாறே மிருகங்களுக்கு தேவையான நீர் மற்றும் உணவைப் பெற்றுக்கொள்ள வாசஸ்தளங்களை வளப்படுத்தல், தேசியப் பூங்காக்களுக்கு வருகைத்தரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், வனப் பிரதேசங்களில் வீதிக் கட்டமைப்பை புனரமைப்பதற்கும் அபிவிருத்தி செய்தவற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

“நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய எதிர்வரும் மூன்றுவருட காலப் பகுதியில் இலங்கையின் வனப் பரப்பை 30% வரை அதிகரிக்கும் சவாலை வெற்றிகொள்வதற்காக வனப் பாதுகாப்பு அமைச்சினால் விசேட செயற்பாடுகள் முன்னெடுக்கபடப்டுள்ளன. மேலும், பசுமைப் போர்வையை விரிவாக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள், சதுப்புநிலங்கள் மற்றும் கண்டல் தொகுதி பாதுகாப்பு, மீள்காடாக்கம், கங்கைகள் மற்றும் நிலப்பரப்பில் குறிப்பிட்ட இடங்களில் மாத்திரம் மணல் அகழ்வு, நிரல்களை அமைத்தல், சூழல்சாரந்த சுற்றுலாத்துறை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வனப் பரப்பை 30% வரை அதிகரிக்கும் போது நகர, புறநகர் பிரதேசங்களில் தாவரப் பூங்காக்கள் நிர்மாணித்தல், அதிவேகப் பாதைகள் இரு புறங்களிலும், மிதிவண்டிப் பாதையின் இரு புறங்களிலும், நகர தொடர்மாடிக் கட்டிடங்கள், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலை வளாகங்களில் மரநடுகை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் விடயப் பரப்புக்குள் வரக்கூடிய திணைக்களமாக தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின் புதிய எண்ணக்கருவின் கீழ் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டதிட்டங்களுக்கு அமைவாக உச்ச பாதுகாப்புடன் மிருகங் கங்களை காட்சிப்படுத்தல், போன்றி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் உள்நாட்டு மற்றும் வெ ளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவருவதன் மூலம் தேசிய வருமானத்தை அதிகரித்துக்கொள்ள தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அமைச்சின் கீழுள்ள அரச மரக்கூட்டுத்தாபனம் 2021 ஆம் அண்டில் கொவிட் நிலமையிலும் 2021.12.31 ஆம் திகதியளவில் ரூ,மில்.6153.00 விற்பனை வருமானத்தை ஈட்டியுள்ளது. நியதிச்சட்ட நிறுவனமொன்றாக நாட்டின் சிறந்த மரப்பொருட்களை வழங்குநராக திகழும் இலக்கை நோக்கி பயணிப்பதற்குத் தேவையான தலைமைத்துவம் என்னால் எப்போதும் வழங்கப்படுகின்றது.

மரம்செடிகள் கால்நடைகள் மற்றும் இயற்கைச் சூழல் வளங்களைப் பாதுகாப்பதற்காக அமைச்சு என்ற ரீதியில் பாரிய பணியை நிறைவேற்றுவதற்காக இதுவரை தலைமைத்துவத்தை வழங்கி செயலாற்றிய கௌரவ வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு கௌரவ அமைச்சர் சீ. பீ. ரத்நாயக்க அவர்கள் மற்றும் முன்னாள் வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபதிரண அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். முன்னேற்ற அறிக்கையை தயாரிப்பதற்காக தகவல்களை வழங்கிய அனைத்து நிறுவனத் தலைவர்களுக்கும் ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும்மொழிபெயர்ப்பு பணியை மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மஹிந்த அமரவீர

விவசாய மற்றும் வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர்

வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் வாழ்த்துச்செய்தி

உலகளாவிய ரீதியில் முழு உலகத்திலும் பரவியுள்ள கொவிட்தொற்றுநோய் காலப்பகுதியில் "நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சினால் நிறைவேற்ற வேண்டிய பல சவால்கள் உள்ளன. வனசீவராசிகள் பாதுகாப்பு மற்றும் வனப் பாதுகாப்புக்கு ஏற்புடைய கொள்கைகள் மற்றும் சட்ட விதிகளுக்கு அமைய மனிதனுக்கு மிகவும் கூருணர்வுமிக்க மரஞ்செடிகொடிகள் மற்றும் கால்நடைகளை பாதுகப்பதற்கு எமக்கு முன்னே உள்ள சவால்களை வெற்றிகொள்வதற்கு எப்போதும் வழிகாட்டல்களை வழங்க அமைச்சு தயாராக உள்ளது.
எதிர்கால சவால்களை வெற்றிகொள்வதற்காக இராஜாங்க அமைச்சு, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம் அத்தோடு, அரச மரக் கூட்டுத்தாபனம் என்பன அமைச்சின் கீழ் இயங்கிவரும் சூழல் தொகுதி பாதுகாப்பு முகாமைத்துவ கருத்திட்டங்ளுடன் இணைந்து விசேட நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

19 மாவட்டங்களின் கீழுள்ள 133 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள மனித யானை மோதல்களை தீர்ப்பதற்காக முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்டுள்ள விசேட செயலணியின் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. யானை வேலிகளை அமைத்தல், காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதை குறைப்பதற்காக நவீன தொழில்நுட்ப முறைகளை அறிமுகம் செய்தல், வனசீவராசிகளை பேணிப் பாதுகாத்தல், வனசீவராசிகளுக்கான நீர் மற்றும் உணவை வழங்குவதை அதிகரித்தல் மற்றும் இயற்கைச் சூழலை பாதுகாத்து யானைகள் பயணிக்கும் பாதைகளில் தடையின்றி பயணிப்பதற்கு உள்ள தடைகளை நீக்குவதற்கு வனசீவராசிகள் திணைக்களத்தின் ஊடாக நிறைவேற்றுவதற்குத் தேவையான கொள்கைத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறே, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

தேசிய வனப் போர்வையை 30% வரை அதிகரிக்கும் பொருட்டான இலக்குகளை வெற்றிகொள்வதற்கான காடு வளர்ப்பு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், 2021 ஆம் ஆண்டு விசேட வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளின் கீழ் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் மூலம் அதிவேகப் பாதைகள் இரு புறங்களிலும், மிதிவண்டிப் பாதையின் இரு புறங்களிலும், நகர தொடர்மாடிக் கட்டிடங்கள், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலை வளாகங்களில் மரநடுகை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்தோடு புறநகர்ப் பிரதேசங்களில் பூங்காக்கள் நிர்மாணிக்கும் பணிகள் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே, திணைக்களத்தினால் பசுமைப் போர்வையை விரிவுபடுத்தல், மீள்காடாக்க கருத்திட்டங்கள், கங்கைகளை அண்டிய குறிப்பிட்ட இடங்களில் மணல் அகழ்வு, நிரல்களை அமைத்தல் மற்றும் சூழல் சுற்றுலா நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சிகள் பல தற்போது ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

தேசிய மிருகக் காட்சிகள் திணைக்களத்தின் கீழ் உள்ள தெஹிவலை மற்றும் பின்னவலை மிருகக் காட்சிசாலை, பின்னவலை யானைகள் சரணாலயம் மற்றும் ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா ஆகியவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளை அதிகரித்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கு தேவையான நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டல் வழங்கப்படுகின்றது. மேலும், பிலியந்தலை கஹபொல பிரதேசத்தில் 70 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய மிருக்க் காட்சிசாலையை ஆரம்பிப்பதற்கு தேவையான மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

அரச மரக்கூட்டுத்தாபனம் காணப்படும் கொவிட் நிலமையிலும் 2021 செப்டம்பர் மாத இறுதியில் ரூ.மில். 6153 உயர் விற்பனை வருமானத்தைப் பெற்று நாட்டின் தேசிய வருமானத்தை அதிகரிப்பதற்கு தேவையான பங்களிப்பை வழங்கியுள்ளது. அவ்வாறே, அரச மரக் கூட்டுத்தாபனத்தின் மூலம் ஏற்றுமதி செய்யப்படும் மரக் குற்றிகளுக்குப் பதிலாக பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களாக ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நியச் செலாவணியை அதிகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், இலங்கைக்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மரப் பலகைகளை கண்காணிப்பதற்கும் தரமான மரப் பலகைகளை இறக்குமதி செய்வதற்கான திட்டங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுச் சூழல் பாதுகாப்பு முகாமைத்துவக் கருத்திட்டங்கள் மூலம் உயிர் பல்லினத்தன்மையைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கும் தேவையான நிகழ்ச்சித்திட்டங்கள் வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஊடாக செயற்படுத்தப்படுகின்றன. கருத்திட்டங்கள் மூலம் ஒதுக்குக் காடுகளில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் சூழல் சுற்றுலாக் கைத்தொழிலை விருத்திசெய்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் இயலளவை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் தேவையான நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

விசேடமாக வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழுள்ள கிரிதலையில் நிர்மாணிக்கப்பட்டுவரும் வனசீவராசிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த பின்னர் வனசீவராசிகள் ஆராய்ச்சிகளின் தரத்தை மேம்படுத்த முடியும். வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் இயங்கிவரும் நுவரெலியா வனவியல் நிலையத்தை அபிவிருத்தி செய்வதனூடாக பல்கலைக்கழக மட்டத்திற்கு தரம் உயர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் உயர் கல்வி கற்ற ஆர்வமுள்ள மாணவர்களுக்கு உயர் கல்வி சந்தர்ப்பத்தை மேம்படுத்துவதற்கு தேவையான பங்களிப்பு கருத்திட்டங்கள் ஊடாக வழங்கப்படுகின்றன. அத்தோடு, தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் இனாமலுவ வனவியல் வெளிக்களப் பயிற்சி நிலையத்தின் வேலைகள் நிறைவடைந்த பின்னர் உயர் கல்வி கற்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அதன் மூலம் அதிகம் பிரயோசனம் அடைய முடியும்.

மனிதனின் இருப்புக்கு வனசீவராசிகள் மற்றும் வன வளங்களை கட்டாமாக பாதுகாத்துக்கொள்ளல் வேண்டும். அதற்கான தலைமைத்துவத்தை வழங்கி நடவடிக்கை எடுத்த கௌரவ வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சீ.பி. ரத்நாயக்க அவர்கள்மற்றும் தற்காலத்தில் அமைச்சுப் பதவி வகிக்கும் மஹிந்த அமரவீர அவர்களுக்கும், முன்னையவனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சோரத்ன விதானபதிரண அவர்களுக்கும், வனப் பாதுகாப்பு,வனசீவராசிகள் பாதுகாப்பு,தேசிய மிருகக்காட்சிசாலை ஆகிய திணைக்களங்களின் பணிப்பாளர் நாயகங்கள், மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளர் மற்றும் பொது முகாமையாளர், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கருத்திட்டத்தின் கருத்திட்டப் பணிப்பாளருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். முன்னேற்ற அறிக்கையை தயாரிப்பதற்கு தகவல்களை வழங்கிய நிறுவனத் தலைவர்களுக்கும் ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் மொழிபெயர்ப்பு பணிகளை நிறைவேற்றிய உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆர். எம். சீ. எம். ஹேரத்
செயலாளர்
வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு

அத்தியாயம் 01 – நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

2020.08.09 ஆம் திகதிய 2187/27 ஆம் இலக்க , அதி விசேட வர்த்தமானி மூலம் வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு ஏற்படுத்தப்பட்டது.

அதன்படி வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சுக்கு "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம் வனஜீவராசிகள் பாதுகாப்பு மற்றும் வனப் பாதுகாப்புக்கான உரிய கொள்கைகள் , கட்டளைகளின் பிரகாரம் பூமிக்கு மிக உணர்வு பூர்வமான வனத் தாவரங்கள் விலங்குகள் கால்நடைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே அமைச்சின் கீழ் உட்படும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் மூலம் தேசத்தின் நம்பிக்கையை வென்ற மிகச் சிறந்த மரங்கள் மற்றும் மரத்தினாலான பொருட்களின் வழங்குனர்களாக எதிர்வரும் ஐந்து வருடங்களினுள் ஆவதற்குத் தேவையான தலைமைத்துவத்தினை வழங்குகிறது. அவ்வாறே இராஜாங்க அமைச்சுக்கு கொள்கையை வழிகாட்டுவதன் மூலம் வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பின் மூலம் உயிர்ப் பல்வகைமைத் தன்மையை வளர்ப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குகின்றது. கூருணர்வுடைய காடு வளர்ப்பின் மூலம் தேசிய வனப் பரம்பலை விரிவுபடுத்தல் மற்றும் வன விலங்குகள் வாழ்கின்ற இயற்கைச் சூழலைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் பொறுப்பும் அமைச்சிட்ம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே 2022.03.08. ஆம் திகதி 2270/14 இலக்கம் உடைய அதி விசேட வர்த்தமானி மூலம் வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு ஏற்படுத்தப்பட்டது. அதன்படி வனஜீவராசிகள் பாதுகாப்பு, யானைவேலி மற்றும் அகழிகள் நிருமாணம் உள்ளடங்கலான பாதுகாப்பு றடவடிக்கைகள் மற்றும் காடுகள் மீள் வளர்ப்பு மற்றும் வன வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் விடயப் பரப்புக்கு உரிய அவ்வமைச்சின் செயலாற்றுகை அறிக்கையும் இவ்வறிக்கைக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.2 அமைச்சின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி

தொலைநோக்கு

"வனசீவராசிகள் மற்றும் வன வளங்களை பேணிப் பாதுகாக்கும் நிலைபேறான தேசமொன்றைக் கட்டியெழுப்புதல்"

செயற்பணி

"வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பினூடாக உயிர்ப் பல்வகைமையை பேணிக் காப்பதை நோக்காகக் கொண்டு அந்தந்த இடங்களிலுள்ள தாவரங்களைப் பாதுகாத்தல் மற்றும் அந்தந்த இடங்களிலும் அதற்குப் புறம்பாகவும் கால்நடைகளைப் பாதுகாத்தல், வலுவாதாரமிக்க மரத் தொழிலை ஊக்குவிப்பதற்காக கொள்கைகளை உருவாக்குதல், முன்னோடி நிறுவனங்களை ஒருங்கிணைத்தல், செயற்படுத்தல் மற்றும் செயலுருப்படுத்தலுக்காக தலைமைத்துவம் வழங்குதல்"

1.3 பிரதான செயற்பாடுகள் மற்றும் விடயப் பரப்பு

விடயப் பரப்பெல்லை

வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பினூடாக உயிர்ப் பல்வகைமையை பேணிக் காத்தல் மற்றும் சுற்றாடலுக்கு நலன் பயக்கும் பயிர்செய்கைகளின் ஊடாக தேசிய வனாந்தரங்களை விரிவாக்குதல் மற்றும் வன சீவராசிகள் வாழும் இயற்கைச் சுற்றாடலை பாதுகாத்தல்.


பணிகளும் செயற்பாடுகளும்

1. "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்திற்கு அமையவும், அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படுத்த உத்தேசிக்கப்பட்டதுமான "வனசீவராகளின் பாதுகாப்பு மற்றும் வனப் பாதுகாப்பினை" உருவாக்கும் பொருட்டு பிற தேசிய கொள்கைகளை அடிப்படையாக கொண்டமைந்த குறித்த சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களுக்கு ஏற்ப வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு விடயத்திற்கு உரிய கொள்கை உருவாக்கம்,
2. தேசிய வரவுசெலவுத்திட்டம், அரசாங்க முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உள்ள செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்,
3. அமைச்சின் பரப்பெல்லைக்குக் கீழுள்ள நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் அதற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள், செயற்திட்டங்களை வடிவமைத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

விசேட முன்னுரிமைகள்

1. வன சீவராசிகளின் பாதுகாப்புக்குத் தேவையான வனப்பூங்காக்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் வனசீவராசிகளின் உணவுப் பயிர்களை விரிவுபடுத்தல்.
2. வனசீவராசிகளினால் கிராமப்புற வீடுகள், சொத்துக்கள் மற்றும் பயிர் செய்கை ஆகியன தொடர்பான பாதிப்புக்களை குறைத்துக் கொள்வதற்கான நவீன வேலைத்திட்டகளை செயற்படுத்தல்
3. யானை மனிதன் மோதலை கட்டுப்படுத்தும் வகையில் அவ்வாறு ஆபத்தான பிரதேசங்களில் மின் வேலிகள், அகழிகள் உட்பட பாதுகாப்பான வேலைத்திட்டங்ளுக்கு நிகராக சமுதாய அடிப்படையிலான பாதுகாப்பு செயன்முறைகளை நடைமுறைப்படுத்தல்.
4. வனப் பயிர்செய்கைகளை விரிவாக்குவதன் மூலம் வன அடர்த்தியை உயர் மட்டத்தில் பேணுவது போன்றே பாடசாலைகள், வைத்தியசாலைகள், அலுவலகங்கள், வேலையிடங்கள் மற்றும் பாதைகள் என்பன குறைவாக காணப்படும் பிரதேசங்களில் போன்றே நகர பூங்காக்களிலும் அறிமுகப்படுத்தல், விரிவாக்குதல்.

1. 4. நிறுவன ஒழுங்கமைப்பு



1.5 அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் கருத்திட்டங்கள்

- அரச மரக் கூட்டுத்தாபனம்
- சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கருத்திட்டம் (ESCAMP)

1.5.1 அரச மரக் கூட்டுத்தாபனம்

அறிமுகம்

அரச மரக் கூட்டுத்தாபனமானது 1957 இலக்கம் 49 உடைய அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1968.04.04 ஆம் திகதிய மற்றும் இலக்கம் 14796 வர்த்தமானி மூலம் தாபிக்கப்பட்டதோடு, 1969.11.07 இலக்கம் 14879 உடைய வர்த்தமானி அறிவிப்பு, 1982.02.05 இலக்கம் 178 /10 அதி விசேட வர்த்தமானி அறிவிப்பு, 2001.06.26 இலக்கம் 1190/07 உடைய அதி விசேட வர்த்தமானி அறிவிப்பு மற்றும் 2008.02.25 இலக்கம் 1538/7 வர்த்தமானி மூலம் மேலும் திருத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டதோடு , மரம் மற்றும் மரம் சார்ந்த உற்பத்திக் கைத்தொழிலில் உச்சத்தில் இருந்து இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெறுமதிமிக்க பங்களிப்பை வழங்குகின்றது.

தொலைநோக்கு

தேசத்தின் நம்பிக்கையை வென்ற மிகச்சிறந்த மரம் மற்றும் மரத் தளபாட வழங்குனராக மற்றும் மரம்சார் சந்தையில் உண்மையான தலைமைத்துவத்தை வகித்தல்

செயற்பணி

தொழில்நுட்ப அறிவு, நன்மதிப்பு மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றைப் பயன்படுத்தி சட்ட ரீதியானதும் சூழல் நட்புறவானதுமான உள்நாட்டு தேவைப்பாட்டுக்கு அமைய கொள்வனவாளர்களின் மரம் மற்றும் மரத் தளபாடப் பண்டங்களின் கேள்விக்கு ஏற்ற உற்பத்தியினை வழங்குதல்

கடமைப் பொறுப்பு

- காடுகளில் இருந்து மரங்களை வெட்டி அகற்றுதல், அந்த மரங்களை அரிமரங்களாக மற்றும் முடிவுப்பொருள் பண்டங்களாக மாற்றுதல், மரக் கட்டைகள், அரிமரங்கள் மற்றும் முடிவுப்பொருள் பண்ட உற்பத்தி, சந்தைப்படுத்தல் மற்றும் மேற்போந்த பணிகளுக்காக காட்டு வழிப் பாதைகளை அமைத்தல்.
- மரங்களை மரக்குற்றிகளாக மாற்றும் நிலையங்கள், மரம் அரிக்கும் ஆலைகள், எண்ணெய் வடிகட்டும் மற்றும் பதனிடும் இயந்திர ஆலை, மரம் காய வைத்தல் மற்றும் மரம் காய வைக்கும் அடுப்பு ஆகியவற்றுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் நிர்மாணித்தல் மற்றும் செயற்படுத்துதல்.
- மரம் சந்தைப்படுத்தல் நிலையங்களை பேணிச் செல்லல்
- மர உதிரிப் பண்டங்கள் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்.
- மரம் இறக்குமதி செய்தல்.
- புதிய காடு வளர்ப்புக் கருத்திட்டங்களை ஆரம்பித்தல், காடு மீள்நடுகை, காடுகள் மற்றும் காடு வளர்ப்பினை விஞ்ஞான ரீதியில் முகாமை செய்தல்.
- விவசாய உற்பத்திகள்.
- மரங்களினாலான முடிவுப்பொருள் மற்றும் பகுதியளவு முடிவுப்பொருள் உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல்.
- தனியார் காணிகளில் இருந்து மரங்களைக் கொள்வனவு செய்தல்.
- வனாந்திரங்கள் சார்ந்த தயாரிப்புக்களின் பதப்படுத்தல்
- பிரம்பு இறக்குமதி செய்தல்.

- மாதிரிகளைப் பரீட்சிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மரங்களை இனம் காணல் மற்றும் மரம் தொடர்பான சான்றிதழ்களை வழங்குதல்.
- மரக் கைத்தொழிலுடன் தொடர்பான விடயங்கள் தொடர்பாக பயிற்சி நிகழ்;ச்சித்திட்டங்களை நடாத்துதல், சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் சூழல் தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.
- கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்கள் மூலம் முழுப் பயன்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்காக திட்டமிடல் மற்றும் அதற்கான முதலீடுகளை மேற்கொள்ளல்

1.6 அமைச்சின் கீழுள்ள நிறுவனமயப்பட்ட நிதியங்கள்

இந்த அமைச்சின் கீழுள்ள வருமானம் உழைக்கும் நிறுவனமான அரச மரக் கூட்டுத்தாபனம் மற்றும் வெளிநாட்டு நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் சூழல் தொகுதிகளின் பாதுகாப்பு முகாமைத்துவக் கருத்திட்டம் (ESCAMP) மாத்திரம் உள்ளதனால் நிறுவனத்திற்கு நிதியங்கள் இல்லை.

1.7 வெளிநாட்டு நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டம்

சூழல் தொகுதிகளின் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கருத்திட்டம் (ESCAMP)

1.7.1 அறிமுகம்

ஆரம்ப திட்ட செலவுக்கு சர்வதேச அபிவிருத்தி சங்கத்தின் (ஐடிஏ) கடன் மூலம் 45.0 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியளிக்கப்பட்டது.இருப்பினும், தற்போதுள்ள COVID-19 நிலைமை காரணமாக மொத்த செலவு கழிக்கப்பட்டுள்ளது; எனவே கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி திட்டமானது 35.0 மில்லியன் அமெரிக்க டொலர்களாக மீள் கட்டமைக்கப்பட்டுள்ளது.
இக்கருத்திட்டம் 2017 ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு 2021 நிறைவடைவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தாலும் உலக வங்கியினால் ஒரு வருட கால நீடிப்பொன்று வழங்கப்பட்டுள்ளது.

தொ. இல	திட்ட கூறுகள்	மொத்த ஒதுக்கீடு (ஐ.அ.டொ. மில்லியன்களில்)
1	முன்னோடி தரைதோற்ற இயற்கை திட்டமிடலும் முகாமைத்துவமும்	0.7
2	இயற்கை வளங்களின் பேண்தகு பயன்பாடு மற்றும் மனித-யானை சகவாழ்வு	6.8
3	பாதுகாக்கப்பட்ட பகுதி முகாமைத்துவம் மற்றும் நிறுவன கொள்திறன்	26.0
4	திட்ட முகாமைத்துவம்	1.5
மொத்தம்		**35.0**

1.7.2 பிரதான அபிவிருத்தி குறிக்கோள்கள்

பிரதான அபிவிருத்தி குறிக்கோள்கள்

- இலங்கையில் பாதுகாப்பு மற்றும் சமூக நலன்களுக்காக தெரிவு செய்யப்பட்ட இடங்களில் சுற்றுச்சூழல் அமைப்புகளின் நிர்வாகத்தை மேம்படுத்துவதாகும்.
- இத்திட்டம் முக்கியமாக பல்லுயிர் பாதுகாப்பை மேம்படுத்துதல்.
- பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு அருகில் வாழும் சமூகங்களின் வாழ்வாதார மேம்பாடு செய்தல்.
- மனித-யானை மோதலைக் குறைப்பதற்கான உத்திகளை வகுத்தல்.
- பாதுகாக்கப்பட்ட பகுதிகளை வினைத்திறனாகவும் பேண்தகு முகாமைத்துவ நடைமுறைகளின் அடிப்படையிலும் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம், வனப் பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றின் திறனை வலுப்படுத்துதல்.

அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

திரட்டு நிதியத்தின் முன்னேற்றம் -வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு - 161

2.1 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் 2021 - முன்னேற்றச் சுருக்கம்

நிறுவனம்	மூலதனம்			மீண்டுவரும்		
	ஒதுக்கீடு (ரூ.மில்)	உண்மைச்செலவு (ரூ.மில்)	%	ஒதுக்கீடு (ரூ.மில்)	உண்மைச் செலவு (ரூ.மில்)	%
வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு	32.77	30.05	92	236.72	233.99	99
சுற்றாடல் முறைமைகளின் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டம்	1518.0	1427.34	94			
மொத்தம்	1550.77	1457.39	94	236.72	233.99	99

செலவுத் தலைப்பு	செலவு விபரம்	20201 மதிப்பீடு (ரூ.)	மேலதிக ஒதுக்கீடு (ரூ)	நி.ஒ. 66 மாற்றீடு (ரூ)	திருத்திய மதிப்பீடு (ரூ)	2021.12.31 ஆம் திகதிக்குச் செலவு (ரூ)	ஒதுக்கீடு மீதி (ரூ)	வீதம் (%)
1001	சம்பளமும்	47,800,000.00	0	5,000,000.00	52,800,000.00	52,202,212.94	597,787.06	98.87
1002	மேலதிக நேர, விடுமுறை நாள் சம்பளம்	9,000,000.00	0	-1,750,000.00	7,250,000.00	6,511,312.70	738,687.30	89.81
1003	வேறு கொடுப்பனவுகள்	18,000,000.00	0	-1,950,000.00	16,050,000.00	15,965,686.19	86,713.81	99.46
1101	பிரயாணச் செலவு	3,000,000.00	0	50,000.00	3,050,000.00	2,966,280.00	83,720.00	97.2
1102	பிரயாணச் செலவு (வெளிநாடு)	2,000,000.00	0	-1,982,000.00	18,000.00	0	18,000.00	0
1201	காகிதாதிகள்	5,000,000.00	0	1,000,000.00	6,000,000.00	5,999,871.86	128.14	100
1202	எரிபொருள்	14,200,000.00	0	-4,050,000.00	10,150,000.00	10,116,617.59	33,382.41	99.67
1203	உணவு பானங்கள் மற்றும் சீருடை	150,000.00	0	-100,000.00	50,000.00	36,000.00	14,000.00	72
1205	வேறு	1,300,000.00	0	-170,000.00	1,130,000.00	724,366.24	405,633.76	64.1
1301	வாகனம்	11,000,000.00	0	0	11,000,000.00	10,874,008.17	125,991.83	98.8
1302	இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்	3,300,000.00	0	-2,000,000.00	1,300,000.00	1,292,947.96	7,052.04	99.46

செலவுத் தலைப்பு	செலவு விபரம்	2021 மதிப்பீடு (ரூ.)	மேலதிக ஒதுக்கீடு (ரூ)	நி.ஒ. 66 மாற்றீடு (ரூ)	திருத்திய மதிப்பீடு (ரூ)	2021. 12.31 ஆம் திகதிக்குச் செலவு (ரூ)	ஒதுக்கீடு மீதி (ரூ)	வீதம் (%)
1303	கட்டிடங்கள் மற்றும் நிர்மாணம்	1,200,000.00	0	-515,000.00	685,000.00	680,638.16	4,361.84	99.36
1401	போக்குவரத்து	7,500,000.00	0	-1,438,000.00	6,062,000.00	5,959,387.87	102,612.13	98.31
1402	தபால் மற்றும் தொலைத்தொடர்பு	4,000,000.00	0	-1,100,000.00	2,900,000.00	2,628,382.86	271,617.14	90.63
1403	நீரும் மின்சாரமும்	9,000,000.00	0	-5,512,000.00	3,488,000.00	3,359,064.87	128,935.13	96.3
1404	வாடகை மற்றும் உள்நாட்டு வரிகள்	80,000,000.00	27,004,679.00	0	107,004,679.00	107,004,650.58	28.42	100
1409	வேறு	7,500,000.00	0	-140,000.00	7,360,000.00	7,314,521.70	45,478.30	99.38
1506	அரசாங்க ஊழியர்களுக்கான உடமைக் கடன் வட்டி	300,000.00	0	-100,000.00	200,000.00	142,723.34	57,276.66	71.36
1703	அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்	200,000.00	0	25,000.00	225,000.00	219,216.50	5,783.50	97.43
மீண்டுவரும் செலவினங்கள்		**224,450,000.00**	**27,004,679.00**	**-14,732,000.00**	**236,722,679.00**	**233,997,889.53**	**2,727,189.47**	**98.85**
2001	கட்டிடமும் நிர்மாணிப்பும்	500,000.00	0	0	500,000.00	0	500,000.00	0
2002	இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்	1,000,000.00	0	0	1,000,000.00	299,824.06	700,175.94	29.98
2003	வாகனம்	6,500,000.00	0	0	6,500,000.00	5,303,850.22	1,196,149.78	81.6
2102	தளபாடங்கள் மற்றும் மனைப்பொருட்கள்	2,500,000.00	0	-40,000.00	2,460,000.00	2,275,481.00	184,519.00	92.5
2401	ஆளணிப் பயிற்சி	1,000,000.00	0	-700,000.00	300,000.00	177,646.00	122,354.00	59.22
2106	மென்பொருள் அபிவிருத்தி			522,000.00	522,000.00	522,000.00	0	
2506-17	ESCAMP	10,000,000.00	0	0	10,000,000.00	9,797,334.43	202,665.57	97.97
2506-12	ESCAMP	990,000,000.00	518,000,000.00	0	1,508,000,000.00	1,417,557,029.00	98,050,123.43	93.49
2509	CITIES		6,545,760.00	14,950,000.00	21,495,760.00	21,495,760.00	0	100
மூலதனச் செலவினம்	மூலதனச் செலவினம்	**1,011,500,000.00**	**524,545,760.00**	**14,732,000.00**	**1,550,777,760.00**	**1,457,428,924.71**	**100,955,987.72**	**93.98**
	முழு மொத்தம்				**1,787,500,439.00**	**1,691,426,814.24**	**96,073,624.76**	**94.63**

2.2 நிர்வாகப் பிரிவு

2021.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம்

- அமைச்சரவை நிரூபங்கள் 28 மற்றும் அமைச்சரவைக் குறிப்புகள் 03 உம் இதுவரை உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்டு அமைச்சரவை அலுவலகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அனுமதி கிடைத்த நிரூபங்களுக்குத் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு திணைக்களங்களை அறிவூட்டியுள்ளதோடு வேறு அமைச்சுக்கள் 16 இன் அமைச்சரவை நிரூபங்கள் 28 இற்கான அவதானங்களும் வழங்கப்பட்டுள்ளன.
- பாராளுமன்ற வாய்மொழிப் பதில்களை எதிர்பார்க்கும் கேள்விகள் 28 இற்காகவும், பாராளுமன்றம் ஒத்தி வைக்கப்படும் சந்தர்ப்பங்களில் வினவப்படுகின்ற கேள்விகள் 04 இற்காக உரிய தினத்திற்கு முன்னர் பதில்கள் வழங்கப்பட்டுள்ளன.
- தகவல்கள் அறிந்து கொள்ளும் சட்டத்திற்கு உரியதாக 2021 ஆம் ஆண்டில் 14 வேண்டுகோள்கள் கிடைக்கப்பெற்றுள்ளதோடு அதற்காக உரிய பதில்கள் வழங்கப்பட்டுள்ளன.
- வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தொடர்பான ஆரம்ப விசாரணை, உத்தியோகத்தர்கள் 50 பேருக்கான சம்பள அதிகரிப்பை வழங்குதல், உத்தியோகத்தர்கள் 05 பேருக்கான வாகன கடவுச்சீட்டுக்களை வழங்குதல், உத்தியோகத்தர்களின் விடுமுறை பற்றிய நடவடிக்கைகள், இடமாற்றங்கள், உத்தியோகத்தர்களின் விடுமுறை புகையிரத கடவுச்சீட்டு மற்றும் தவணை நுழைவுச்சீட்டு வழங்கும் நடவடிக்கைகள், அமைச்சின் தொலைபேசி , தொலைநகல், இணையம் தொடர்கான கட்டணங்களைச் செலுத்துதல், உத்தியோகத்தர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகளை வழங்குதல் பற்றிய நடவடிக்கைகள், ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் பணிக்குழுவின் தகவல்களை புதுப்பித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- நிர்வாகப் பிரிவிடம் 2021 ஆம் ஆண்டுக்குரிய சகல கடமைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

2.3 அபிவிருத்திப் பிரிவு

2021.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம்

- வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துக்குரியதாகக் கிடைத்த மக்கள் முறைப்பாடுகள் சுமார் 100 தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக அறிக்கைகளைக் கோருவதற்காக வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு மற்றும் இராஜாங்க அமைச்சுக்கு முன்வைத்து அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.
- மன்னார் மாவட்டத்தில் முன்மொழியப்பட்ட நீர்வாழ் உயிரினங்கள் வளர்ப்பு தொழில்துறை நகரத்தை ஏற்படுத்தல்- கடற்றொழில் அமைச்சின் மூலம் உரிய இடத்தில் GPS வாசிப்புடன் அறிக்கையை திருத்தியமைத்து அனுப்பியுள்ளதோடு அவ்விடத்துக்கு பிரவேசிப்பதற்கு வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்றுத் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது- (வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்)
- அரசின் அபிவிருத்தி நிகழ்ச்சியில் ஒரு கருத்திட்டமான காபன் உர உற்பத்திக்கு பங்களிப்பு செய்வதற்காக ஹம்பாந்தோட்ட மாவட்டத்தில் கெடன் குளப் பிரதேசத்தில் 100 மெட்ரிக் டொன் தயாரிக்கும் கருத்திட்டம் -
    - ஒரு வருட காலத்திற்கு மாத்திரம் யானைகளின் பயணத்துக்கு இடையூறு அல்லாத நிரந்தர அல்லது தற்காலிக நிர்மாணங்களை மேற்கொள்ளாமையின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது - (வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்)
- யானை மனித மோதலைத் தடுப்பதற்காக அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் செயற்பாடுகளை இணைத்து குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட கால தீர்வு முன்மொழிவுகளை உள்ளடக்கிய அறிக்கையொன்றை முன்வைத்தல்.
- முன்மொழியப்பட்ட ஹம்பாந்தோட்டை காட்டு யானைகள் முகாமைத்துவ ஒதுக்கத்தை பிரகடனப்படுத்துவதற்கு உரிய அமைச்சரவை நிரூபத்துக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளல்.
- அரச மரக் கூட்டுத்தாபனத்துக்குரிய கடமைப் பொறுப்புக்கள் மற்றும் முன்னேற்றம் தொடர்பாகவும் உரிய முரண்பாடுகள் பற்றி அரச மரக் கூட்டுத்தாபனம் மற்றும் அமைச்சுக்குமிடையில் இணைப்பொன்றை வைத்து செயலாளரின் தலைமையில் கலந்துரையாடல் அமர்வுகளை நடத்துதல்.
- வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சுக்கு இணைக்கப்பட்டதாக மர ஒழுங்குமுறை அலகொன்றை அமைத்தல் தொடர்பாக அரச மரக் கூட்டுத்தாபனம் முக்கியமான உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களை நடாத்துதல்.
- பைனஸ் மரங்கள் மற்றும் கிழிக்கப்பட்ட மரங்களை ஏற்றுமதி செய்தல் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை வழங்குவதற்குமான செயன்முறையொன்றைத் தயாரித்து முன்வைத்தல் அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட வேணடும் என வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சரினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
- வனவிலங்குகள் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 71 ஆம் அத்தியாயத்துடன் கூறப்பட வேண்டிய, அந்த கட்டளைச் சட்டத்தின் 22 (அ) ஆவது அத்தியாயத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட, இலக்கம் 2241/41 மற்றும் 2021 ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட "**2021 இலக்கம் 01 உடைய வனவிலங்குகள் மற்றும் தாவர (கீழ்ப்படிவான யானைகளின் பாதுகாப்பு, நலன்கள் மற்றும் பதிவு செய்தலை முறைப்படுத்தல்) உத்தரவு**" 2021.09.22 திகதி பாராளுமன்றத்தில் முறையாக நிறைவேற்றப்பட்டது.

- இதுவரை கீழ்ப்படிவான யானைகளை ஒப்படைக்குமாறு அமைச்சிடம் வழங்கப்பட்டுள்ள கோரிக்கைகள் வனஜீவராசிகள் பாதுகாப்பு, யானைவேலி மற்றும் அகழிகள் நிருமாணம் உள்ளடங்கலான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் காடுகள் மீள் வளர்ப்பு மற்றும் வன வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிடம் முன்வைக்கப்பட்டுள்ளன.

- ஒலியோ ரெஸின் சாறுக்காக வன பாதுகாப்புத் திணைக்களத்திடமுள்ள மற்றும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடமுள்ள பைனஸ் வனச் தனியார் பிரிவினருக்கு குத்தகைக்கு வழங்குதல் என்றவாறு 2021.09.28 திகதிய அமைச்சரவை நிரூபமொன்று அமைச்சரவையின் அனுமதிக்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

- முறையாக கருங்கல் அகழ்வுக்கான கோரிக்கைகள் மற்றும் முறைப்பாடுகள் 35 ஆகும். இக் கோரிக்கைகள் மற்றும் முறைப்பாடுகள் வனஜீவராசிகள் பாதுகாப்பு, யானைவேலி மற்றும் அகழிகள் நிருமாணம் உள்ளடங்கலான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் காடுகள் மீள் வளர்ப்பு மற்றும் வன வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு, வன பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திடம் தேவையானவாறு முன்வைக்கப்பட்டுள்ளன.

- நாற்றுமேடைகளைப் பதிவு செய்தல் தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டுவதற்காக தினமிண மற்றும் தினகரன் பத்திரிகைகளில் விளம்பரமொன்று 2021.11.08 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டது. அதன்படி 2021.12.31 ஆகும் போது விண்ணப்பப்படிவங்கள் 213 உம் அமைச்சிடம் கிடைத்தன. மேலும் இதுவரை இக்கருத்திட்டத்தின் சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டுக் கொண்டுள்ளது.

- பொலன்னறுவை மாவட்டத்தில் விவசாயிகள் மற்றும் பொது மக்களினால் வனஜீவராசிகள் அதிகாரிகளுக்கு இடையூறு ஏற்படுதல தொடர்பாக நியமிக்கப்பட்ட அமைச்சரக ஆலோசனைச் சபையினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை அமைச்சரக ஆலோசனைச் சபையிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. (வெள்ளப் பெருக்குப் பள்ளத்தாக்கு, தேசிய பூங்காக்கள், யக்குரே சார்ந்த பிரச்சினைகள்)

- மதுகம ரன்வலாகல பிரதேசத்துக்கு அருகில் சுற்றுலா அபிவிருத்தி வலயமொன்றை உருவாக்குவதற்கு தொடர்பாக சுற்றுலா அமைச்சு டன் இணைந்து செயலாற்றல்.

- பாதுகாக்கப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட வனங்கள் தவிர்ந்த வனப் பாதுகாப்பாளர் நாயகத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள மீதமுள்ள காடுகளிலிருந்து காடுகள் தவிர்ந்த காணிகளை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைப்பதற்காக காணி ஆணையாளர் நாயகத்திடம் விடுவிப்பதற்காக அமைச்சரவை குறிப்புக்காக அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டது.

- சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கருத்திட்டத்தின் ஒதுக்கீடுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான நிர்மாணங்கள் 2022.06.30 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்வதற்கு திட்டமிடல் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் மற்றும் வன பாதுகாப்புத் திணைக்களங்களில் துரித கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- தற்போது செயல்களை நிறைவு செய்வதற்கு முடியாமல் போன கருத்திட்டங்களின் நிர்மாணங்களை துரிதமாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். இதற்காக திறைசேறி அறிவுறுத்தலின்படி இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்காக அனுமதியைக் கோரி அமைச்சரவை அனுமதியொன்றை முன்வைத்தாலும் இறுதியில் முன்னே நடத்திச் செல்வதற்கு நிதி அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கருத்திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள முழு நிதி ஒதுக்கீடு ரூ. 157 மில்லியன் ஆவதோடு அதில் தற்போது ரூ. 133 மில்லியன் கருத்திட்டத்துக்காக செலவு செய்யப்பட்டுள்ளதோடு மீதியான நிதி ஆவது ரூ. 24 மில்லியன் ஆகும். இக்கருத்திட்டத்தினை 2022 ஜூன் 30 ஆகும் போது நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கருத்திட்ட பதவிகள் 05 இற்காக நேர்முகப் பரீட்சையை நடத்தி புதிய அதிகாரிகள் இணைக்கப்பட்டுள்ளனர்.

- வில்பத்து தேசிய பூங்காவைச் சுற்றி அச்சுறுத்தல் வலய முகாமைத்துவ கருத்திட்டம் GIZ கருத்திட்டத்தின் 2 ஆம் கட்டத்தினை செயற்படுத்துவதற்கு உரிய இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- சுற்றுலா அமைச்சுடன் இணைந்து நானுஓயாவிலிருந்து நுவரெலியா வரை கேபல் கார் கருத்திட்டத்தினைன செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- வன பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தினை திருத்தியமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- வன துறவிகளைப் பதிவு செய்தல் தொடர்பாக 2021.12.31 திகதிக்கு கோரிக்கைகள் 70 கிடைத்துள்ளதோடு அவற்றை சுருக்கி பட்டியலிட்டுள்ளதோடு தேவையான நடவடிக்கைகளுக்காக புத்தசாசன அமைச்சு மற்றும் வன பாதுகாப்பு திணைக்களத்திடம் அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி வன பாதுகாப்பு திணைக்களத்தின் மூலம் புதிய வன துறவிகளுக்காக தற்போது அனுமதிப்பத்திரங்களை வங்குவது மேற்கொள்ளப்படுவதில்லை என்பதோடு தற்போது காணப்படுகின்ற துறவிகளுக்காக நிலைமைகளைக் கவனித்துப் பார்த்து அனுமதிப் பத்திரங்களை வழங்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

- கௌரவ அமைச்சர் அவர்களின் தலைமையில் புதிய கருத்திட்டங்கள் 09 இனை ஆரம்பிப்பதற்காக உரிய மர நடுகை நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பாக அக்கருத்திட்டங்கள் 9 க்குரிய நாடளாவிய ரீதியில் நாற்றுமேடைகளை ஸ்தாபிப்பதனை ஆரம்பித்தல் மற்றும் அதற்குரிய பசுமை இலங்கை "ஒவ்வொரு நபர் ஒரு கன்று" தேசிய நிகழ்ச்சித்திட்டம் எனும் பெயரில் இலக்கம் 02/2022 மற்றும் 2022.01.19 திகதிய சுற்றறிக்கையை வெளியிடுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தக்குரிய காணிகள் தொடர்பா கோரிக்கைகள் 76 க்கு தேவையான அடுத்த நடவடிக்கைகள் மற்றும் அறிக்கைகளை அழைப்பதற்காக வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துக்கும் வனஜீவராசிகள் பாதுகாப்பு, யானைவேலி மற்றும் அகழிகள் நிருமாணம் உள்ளடங்கலான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் காடுகள் மீள் வளர்ப்பு மற்றும் வன வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கும் முன்வைக்கப்பட்டுள்ளது.

- வன பாதுகாப்புத் திணைக்களத்தக்குரிய காணிகள் தொடர்பான கோரிக்கைகள் 124 க்கான அறிக்கைளை அழைத்தல் மற்றும் தேவையான அடுத்த வன பாதுகாப்புத் திணைக்களத்திடம் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு, யானைவேலி மற்றும் அகழிகள் நிருமாணம் உள்ளடங்கலான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் காடுகள் மீள் வளர்ப்பு மற்றும் வன வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கும் முன்வைக்கப்பட்டுள்ளது.

2.4 திட்டமிடல் பிரிவு

2021.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம்

- 2021 ஆண்டில் செயல்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

- அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் காலாண்டு ரீதியிலான 03 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

- அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம் நிதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

- 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டு இலங்கைப் பாராளுமன்றம் மற்றும் ஏற்புடைய ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- 2021.09.30 ல் முன்னேற்றத்தினை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட செயலாற்றுகை அறிக்கையினை பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட செயற்குழுவிற்கு சமர்ப்பித்தல்.

.

- ஜனாதிபதிச் செயலகத்துக்கு, நிதி அமைச்சுக்கு, இலங்கை மத்திய வங்கிக்கு, ஏனைய அமைச்சுகள் மற்றும் பாராளுமன்ற ஆலோசனை குழுவிற்குத் தேவையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.
- "கிராமத்துடன் உரையாடல்" தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாவட்டங்கள் மற்றும் திணைக்களங்களுக்கிடையில் இணைப்பு நடவடிக்கைகளை ஏற்படுத்தல்.

- "கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திணைக்களங்களுக்கு உரியதான மாவட்டங்களில் நிலவுகின்ற பிரச்சினைகள் பற்றிய தகவல்கள் மற்றும் முன்னேற்றங்களை பிரதமர் அலுவலகத்துக்கு முன்வைத்தல்.

2.5 நிதிப் பிரிவு

2021.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம்

- வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டம் மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட செலவுகளை நிதி ஒழுங்கு விதிகள், சட்டவிதிகள், சுற்றறிக்கை மூலமான அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொண்டிருத்தல்.
- கணக்காய்வாளர் மற்றும் திறைசேரிக்குத் தேவையான மாதாந்த, காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தல்.
- இறுதிக் கணக்குகளைத் தயாரித்தலும் சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- களஞ்சிய மற்றும் சொத்து முகாமைத்துவத்துக்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டைத் தயாரித்துள்ளது.
- அமைச்சுடன் தொடர்பான சம்பளம், பொது வைப்பு உள்ளிட்ட அனைத்து மூலதன மற்றும் மீண்டெழும் செலவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் செலவு முகாமைத்துவத்தினை மேற்கொண்டுள்ளது.
- அமைச்சுடன் தொடர்பான அரச கணக்குத் தெரிவுக்குழு மற்றும் அரச தொழில் முயற்சி தெரிவுக்குழுவின் பணிகளை மேற்கொள்ளல் மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் கணக்குத் தெரிவுக்குழுவின் பணிகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- அமைச்சின் மாதாந்த மற்றும் வருடாந்த கணக்குகளைத் தயாரித்தல், அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் வருடாந்த கணக்கு மற்றும் அறிக்கைகளின் மேற்பார்வை
- அரச அலுவலர்களின் முற்பண "பீ" கணக்கு மூலம் கடன் வழங்குதல், அவற்றை உரியவாறு அறவிடுதல், கடன் நிலுவைகளை தீர்த்தல், அதனோடு தொடர்புடைய கணக்குகளைப் பேணல் மற்றும் நி.பி. 506 டீ இறுதி அறிக்கையினைத் தயாரித்தல்.
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பான பதில்களை வழங்கியுள்ளது.
- வருடாந்த காசுப் பாய்ச்சல் நடவடிக்கைகள், பிரதான முற்பணம், இடைக்கால முற்பணம் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு, கணக்கு வைத்தல் மற்றும் அறிக்கையிடல்
- அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் நிதிக் கட்டுப்பாட்டு பணிகள் மற்றும் கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான மேற்பார்வைப் பணிகளை மேற்கொள்ளல் மற்றும் அவற்றின்

2.6 தொழில்நுட்பப் பிரிவு

2021.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம்

- காலநிலை மாற்றத்துக்கான நிலையான தீர்வுகளைக் கொண்ட பசுமை இலங்கையொன்றை உருவாக்கும் ஜனாதிபதி செயலணியிடம் வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்புத் துறைகளுக்கு உரிய செயற்பாட்டு நிகழ்ச்சிகளத் தயாரித்து முன்வைத்தல்.
- முதுராஜவெல ஈரநில வலயத்தின் பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாடு தொடர்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் சுற்றாடல் அமைச்சுடன் முன்வைத்த ஒன்றிணைந்த அமைச்சரவை நிரூபத்திற்காக அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அக்கருத்திட்டத்தின் அடுத்த நடவடிக்கைகளைத் தொகுத்தல்.
- முன்மொழியப்பட்ட மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பணு கரந்த தாவரத்தை வேறு இடமொன்றில் நடுதல் அல்லது பாதுகாத்தல் பற்றி ஒருங்கிணைப்புச் செய்தல்.
- வன விலங்குகளினால் ஏற்படுகின்ற பயிர்ச்சேதங்களைக் குறைப்பதற்காக முறையொன்றைத் தயார் செய்யும் குழுவுடன் ஒருங்கிணைப்'பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வன விலங்குகளினால் ஏற்படுகின்ற பயிர்ச்சேதங்களைக் குறைத்தல் தொடர்பாக குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட கால முகாமைத்துவ திட்டமொன்றை முன்வைத்தல்.
- அரச மரக் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை பற்றி தேடிப் பார்ப்பதற்கு நியமிக்கப்பட்ட குழுவுடன் ஒருங்கிணைந்து செயலாற்றி உரிய அறிக்கையை முன்வைத்தல்.
- அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள வனஜீவராசிகள் இனங்களின் சர்வதேச வர்த்தகம் பற்றிய ஒப்பந்தம் (CITES) இலங்கையினுள் அமுலாக்குதல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக வனவிலங்குகள் மற்றும் தாவர கட்டளைச் சட்டத்தை திருத்தியமைத்தல் பற்றிய உரிய நிறுவனங்களுடன் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- 2019 ஆம் ஆண்டு மே மாதம் நடப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த அழிவடையும் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்துள்ள விலங்குகள் மற்றும் தாவர வகைகள் பற்றிய சர்வதேச வர்த்தகம் பற்றிய ஒப்பந்தத்தின் (CITES) பங்குதாரர்களின் 18 ஆவது மாநாட்டிற்கு சார்பாக ஆரம்பிக்கப்பட்ட அனைத்து கோவைகளிலும் பணிள் மற்றும் கொடுப்பனவு நடவடிக்கைகளை நிறைவு செய்தல்.
- இலங்கைக் கடல் பிரதேசத்தைச் சூழ அமையப் பெற்றுள்ள பவளப்பாறை முறைமையினை வரைபடம் எடுக்கும் கருத்திட்டத்திற்கு உரிய சட்டமாஅதிபர் திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்ட கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளின்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை திருத்தியமைப்பதற்காக வெளிநாட்டு அமைச்சிடம் முன்வைத்தல்.
- 'வனவாழ்க்கை' மாத இதழுக்கான கட்டுரைகளைப் பெற்றுக் கொள்ளும் பணிகள் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களுக்கு மேலதிகமாக அமைச்சின் அலுவலர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் வனவாழ்க்கை' மாத இதழில் உள்ளடங்கும் விடயங்களின் தரத்தினை அதிகரிப்பதற்கான யோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அச்சஞ்சிகையினை ஒவ்வொரு மாதமும் தினமிண பத்திரிகையுடன் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- இலங்கையின் கண்டற் சூழல் முறைமையின் பாதுகாப்பு மற்றும் பேண்தகு பாவனையின் கீழ் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் மூலம் 'ஆனவிலுந்தாவ' ரம்சா ஈரநிலத்தை அண்டியதாக கண்டற் தாவர மீள்நடுகை முன்னோடிக் கருத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- தேசிய சுற்றுலாக் கொள்கை (National Tourism Policy) தயாரிப்பதற்குரிய சுற்றுலாத்துறை அமைச்சின் மூலம் நியமிக்கப்பட்ட மத்திய அமைச்சகக் குழுவுடன் இணைந்து செயற்படல்.
- சுற்றாடல் அமைச்சின் மூலம் அமைக்கப்பட்டுள்ள நிலையான சுற்றாடல் முகாமைத்துவத்தின் பொருட்டு மத்திய அமைச்சக ஒருங்கிணைப்புக் குழுவிடம் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் சார்ந்த விடயங்களை முன்வைத்தலும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.
- ஐக்கிய நாடுகளின் வனாந்திரங்கள் பற்றிய 16 வது மாநாட்டு அமர்வுக்கு (16th of United Nations Forum on Forests (UNFF 16) அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தி Zoom தொழிநுட்பத்தினூடாக கலந்து கொள்ளல்.
- மீள் வனச்செய்கை நடவடிக்கைளுக்காக South – South Cooperation நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக வன பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துடன் செயற்பட்டு உரிய கருத்திட்ட அறிக்கையை முன்வைத்தல்.
- வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின், உலக வங்கி நன்கொடையின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற "பல்லுயிர் அமைப்பு பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம்" (Eco system conservation and Management Project) கருத்திட்டத்தின் நடவடிக்கைக்காக ஒத்துழைப்பு வழங்குதல்.
- அமைச்சக ஆலோசனைக் குழு கூட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களின் பிரகாரம் விசாரணை அறிக்கையை முன்வைத்தல்.
- இலங்கையினுள் GSP+ உதவியை செயற்படுத்துவதற்கான இணைப்புகள் பற்றிய உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- இலங்கையினுள் GSP+ உதவியை செயற்படுத்துவதனை இலகுபடுத்துவதன் பொருட்டு இந்நாட்டு CITES ஒப்பந்தத்தினை வினைத்திறனாக செயற்பட்த்துவதற்கான உத்தரவுத் தொடர்களினை பிரகடனப்படுத்துவதற்கு வனவிலங்குகள் மற்றும் தாவர பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தினை திருத்தியமைத்தல் தொடர்பாக உரிய நிறுவனங்களுடன் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் செயலணியின் மூலம் ஏற்பாடு செய்த வனங்களபை பாதுகாத்துக் கொள்வதன் முக்கியத்துவம் பற்றி கந்தக்காடு, நவசேனபுர, வவுனியா பிரதேசங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு மத்திய நிலையங்களில் விசேட சொற்பொழிவுகளை நடத்துதல்.
- ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற குடிமக்களின் பங்களிப்புடன் சட்ட ரீதியற்ற சூழல் செயற்பாடுகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு டிஜிடல் தொழிநுட்ப பாவனையுடன் விண்ணப்பமொன்றதை தயாரிப்பதற்கான கருத்திட்டத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- 2022 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற பசுமை இலங்கை தேசிய நிகழ்ச்சித்திட்டத்துக்குரிய நடவடிக்கைகளை அபிவிருத்திப் பிரிவு மற்றும் ஒன்றாக ஒருங்கிணைதல்.
- காலநிலமாற்றங்கள் பற்றிய பரிஸ் உடன்படிக்கயின் கீழ் புதுப்பிக்கப்பட்ட தேசிய ரீதியாக தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்கு ஏற்புடையவாறு உயிர்ப்பல்வகைத்தன்மை பிரிவு மற்றும் வனாந்தரங்கள் பிரிவு தொடர்பாக சுற்றாடல் அமைச்சுடன் ஒருங்கிணைந்து செயற்படல்.

2.7 கருத்திட்டப் பிரிவு

2021.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம்

- அமைச்சின் ஊடகச் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்தல் / வெகுசன ஊடகங்களில வெளியிடப்படுகின்ற தகவல்கள் பற்றி சரியான தகவல்களை உரிய திணைக்களங்களிடமிருந்து பெற்றுக் கொண்டு தேவையான அறிவுறுத்தல்களை மேற்கொள்ளல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் ஊடக கலந்துரையாடல்களை அழைத்து தகவல்களை சரி செய்தல்.
- மக்களின் முறைப்பாடுகள் மற்றும் அமசைசர் அவர்களடமிருந்து கிடைக்கின்ற கடிதங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வன பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களங்களினால் அனுப்பப்படுகின்ற அறிக்கைகள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அமைச்சின் இணையத்தளத்தை தயாரிப்பதற்காக பங்களிப்புச் செய்தல்.
- இணையத்தளத்துக்காக விசேட செய்திகளை வழங்குதல்.
- வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரிகள் முகம் கொடுக்கும் அச்சுறுத்தலான சந்தர்ப்பங்களையொட்டிய குறுகிய கதையொன்றைத் தயாரித்து அதனுடன் பூங்கா பற்றிய சுருக்கமான அறிக்கையொன்றை மும்மொழிகளிலும் இணையத்தில் பதிவேற்றல்.

2.8 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

2021.12.31 ஆம் திகதியில் முன்னேற்றம்

- 2020 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் இலிருந்து டிசம்பர் வரை மற்றும் 2021 ஆம் ஆண்டின் ஜனவரியிலிருந்து ஜூலை வரை வவுச்சர்களை பரீட்சித்தல்.

- லுணுகம்வெஹெர தேசிய பூங்காவுக்குரிய குளங்களை புனர்நிர்மாணம் செய்வதற்குரிய விசேட துறை பரிசோதனையொன்றை மேற்கொள்ளல்.

